படுவதுடன், பட்டங்கள் ஏதேனும் வழங்கப்படுகிறதா ? அதைப் பற்றி பரிசீலித்து ஆவன செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அரசு உதவித் தொகை ஏதும் தருவதில்லை. அங்கு வந்து பயிலுகின்ற மாணவர்களுக்கு உண்ண உணவும், இருக்க இட வசதியும் இலவச மாகச் செய்து தருகிறார்கள். அங்கே நான்கு ஆண்டுக் காலம் பயிற்சிப் பெற்றதற்குப் பிறகு, நாதஸ்வரத்திலே பயிற்சி பெற்றவர் களுக்கு "நாதஸ்வர இசை மணி" என்றும், தவுலிலே பயிற்சி பெற்றவர்களுக்கு "தவுல் நாதமணி" என்றும் பட்டத்தைை வழங்கு கிறார்கள்.

Thanjavur Big Temple.

* 324 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government has urged the Union Government to permit the tourists visiting Thanjavur to go up to the High Tower of the Big temple; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

இராமேஸ்வரம் கோயில்

* 325 வினா—திரு. பெ சௌந்தரபாண்டியன்

திரு. ச. சங்குமுத்துத் தேவர் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 1972 சனவரியில் இராமேஸ்வரம் கோயிலில் தீ விபத்து ஏற்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதனால் ஏற்பட்ட நட்டம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) சுமார் 1½ இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்படு கின்றது.